# விமர்சன நோக்கில் கடலும் வண்ணத்துப்பூச்சிகளும் நாவல்

***முனைவர் இரா. அந்தோணிராஜ்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6442

நாற்பதாண்டு கால சிறுகதை இலக்கியத்தளத்தில் தனக்கென்று தனிப்பாணியை வகுத்துக் கொண்டவர் சுரேஷ்குமார் இந்திரஜித். அவருடைய நாவலான கடலும் வண்ணத்துப்பூச்சிகளிலும் அது நிகழ்ந்திருக்கிறது. ஒருவித இருத்தலியல் தளத்திலேயிருந்து புனையப்பட்ட பிரமிளின் வண்ணத்துப்பூச்சியும் கடலும் கவிதைக்கும் இந்நாவலுக்கும் தலைப்பினைத் தவிர யாதொரு ஒப்புமையுமில்லை. நேர்கோட்டுப் பாணியிலமைந்த கதைகளையெல்லாம் கடந்து வந்துவிட்டபின் நவீன யுகத்தில் வெவ்வேறான அர்த்தத்தளத்தில் இந்நாவல் பயணப்படுகிறது. கடலுக்கும் வண்ணத்துப்பூச்சிகளுக்குமான தொடர்புயாது கடலோ அல்லது வண்ணத்துப்பூச்சிகளோ எவற்றிற்கான குறியீடு என்பதையெல்லாம் இக்கதையிலே வரும் எழுத்தாளனைப் போலவே நாமும் அலட்டிக் கொள்ளாமல் வாசிப்பிற்கு உட்படுத்தும்போது இந்நாவல் புதுவிதப் பிரதியாக நம்மைப் பார்க்கிறது.

மூன்று அத்தியாயங்களோடு ஏறக்குறைய நூறு பக்கங்களைக் கொண்ட நாவல். நோபல் பரிசு பெற்ற ஒரு எழுத்தாளனின் பால்ய காலம், திருமணம், முதுமைப்பருவம் போன்றவற்றை வெளிப்படுத்தும் தன்மையைக் கொண்டு இந்நாவல் இயங்கினாலும், அதனைச் சுயவிவரணை அல்லது தன் வரலாறு போன்றதொரு தளத்தில் அல்லாமல் அவ்வெழுத்தாளனின் வாழ்க்கையோட்டத்தினூடே பயணித்திருப்பது சுரேஷ்குமார இந்திரஜித்திற்கு இயல்பாகவே கைவந்திருக்கிறது.

முதல் அத்தியாயம் நோபல்பரிசு பெற்ற எழுத்தாளனின் ஏற்புரை பரிசு பெற்ற கதையின் கதை அதற்கான பேட்டி அவருடைய காதலியுடனான உரையாடல், பால்யகால நினைவு, மேடைப்பேச்சு கேள்வி பதில் என பல தளத்தில் விரிகிறது. இவை அனைத்துமே பலவித விவாதத்தினை நம்முன் வைக்கிறது. புராணங்கள் இதிகாசங்கள் தொன்மங்கள் என மாபெரும் பின்னிணைப்பு புனைவியல் பின்னணி கொண்ட தமிழ்ச்சமூகம் பிரதாப முதலியார் சரித்திரத்தோடு தன்னைச் சற்று விடுவித்துக் கொண்டது.

பத்மாவதி சரித்திரம் தொடங்கி ஒரு நூற்றாண்டு காலம் கழிந்த சூழலில் ரஷ்ய யதார்த்தவாத பாணிக்குப் பழக்கப்பட்ட வாசகன் புதிய இலத்தீன் அமெரிக்க இலக்கியத்தாக்கத்தினால் விளைந்த புதியவகை பாணியலான படைப்புக்களின் வாசிப்புத் தளத்திற்கு தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை. அல்லது முயலவில்லை. எழுத்தாளர்களுக்கு வழங்கப்படக்கூடிய விருதின் பின்னணி அல்லது விருது பெற்றவுடன் அது அளிக்கக்கூடிய எழுத்தாள அல்லது வாசக மனநிலையென்பது யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது. அது ஓர் உலகம். நோபல் பரிசு பெற்ற எழுத்தாளனைப் பேட்டி காணும் போது அவனுக்கு முன் வைக்கப்படும் கேள்விகளானது அபத்தத்தின் உச்சியைத் தொடுகிறது. இலக்கியம் தெரிந்த அல்லது தெரியாத நபர்களைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் ஒரு பெருங்கூட்டம் இவ்வாறான விருதுகளுக்குப் பின் அபத்தக் கேள்விகளோடுதான் திரிகின்றது.

உணவுப் பொட்டலத்திற்காக அவலப்படும் பால்யவயது, பொறுப்பின்றி திரிந்து கொலை செய்யப்பட்ட தகப்பன் வறுமையின் யதார்த்தத்தை எதிர்கொள்ள வழியின்றி தற்கொலை செய்து கொண்ட தாயும் பாட்டியும், இவையனைத்தையும் கடந்து யாரென்றே தெரியாத பெரியவரிடம் பெற்ற உதவி மற்றும் கல்வியைக் கொண்டு வளர்ந்த ஒரு எழுத்தாளன் இலக்கியத் திற்கான நோபல் பரிசு பெறுமளவிற்கு ஒரு கதையைப் படைக்கிறான். அக்கதை கதைக்குள் கதையாக இரட்டைத் தன்மையோடு இரட்டை மனிதனின் (Dural Man) கதையாக விரிகிறது. மாய யதார்த்தப் பாணியில் அமையப்பெற்ற அக்கதை ஒரு மனிதன் இரு மனிதர்களாக மாறி வாழ்வின் அவல அதிர்ஷ்டங்களைச் சந்தித்து மீண்டும் ஒரு மனிதனாக மாறுவதை யதார்த்தத்தின் புனைவாகவும் புனைவின் யதாத்தமாகவும் கொள்ளலாம். தற்கால வட்டார இனவரைவியல் சூழலிலே பெரிதும் பழக்கப்பட்ட வாசக மனநிலைக்கு தமிழ் மரபார்ந்த அல்லது இந்தியப் பாரம்பரியத்திற்கான கதையாக அல்லாமல் ஒட்டுமொத்த மனிதர்களுக்கான கதையாக அமைந்தால் அது பெருவாரியான வாசகர்களுக்கு உவப்பினைத் தருவதில்லை. அந்த எழுத்தாளனின் காதலி ஒரு இடத்தில் இதனைக் குறிப்பிடுகிறாள். அப்பரந்த விசாலமான இலக்கிய அறிவுச் சிந்தனையே அவளை அவருடைய தோழியாக்கியது, காதலியாக்கியது. அவரை ஒரு மனிதனாக இயங்கச் செய்கிறது.

வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள், மனிதர்கள் எவ்வாறு ஒரு கதையின் குறியீடாக மாறுகிறார்கள் அல்லது குறியீடாக ஆக்கப்படுகிறார்கள் என்பது குறித்த விவரனை இந்நாவலின் சிறந்த பகுதி. தமிழிலே வெளிவரக்கூடிய மனப்பூர்வமற்ற முழுமையான சிருஷ்டி உணர்வில்லாத வெற்றுக்கதைகள் ஒருபுறமும் திருகலான மொழி விளையாட்டும் வலிந்து புகுத்தி துருத்திக் கொண்டிருக்கும் வாக்கிய அமைப்பு கொண்ட குழப்பக் கதைகள் இன்னொரு புறமும் போலித்தனமான இலக்கிய உலகை அல்லது வாசகனை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன போன்ற விமர்சனத்தை அவ்வெழுத்தாளனின் கேள்வி பதில்களின் வழி முன்வைப்பது நாவலுக்கு வெளிநின்று நம்மை வாசிக்கச் செய்கின்றது. ஆங்கிலத் தில் இலகுவாக எழுதிவரும் எழுத்தாளர் ஐந்து குறுநாவல்களை தமிழிலே வெளியிடுகிறார். அப்பிரதிகளின் சிறு பகுதிகளை நாவலாசிரியர் இரண்டாவது அத்தியாகமாக அமைக்கின்றார். இவை ஐந்து பிரதிகளாக நம்மைக் கடக்கிறது. போலி திராவிடம் கம்யூனிசம் பகடி செய்யப்படுகிறது. பிராமணியத்தின் வீழ்ச்சி ஆண் பெண் உறவு அவ்வுறவின் போலித்தனம், அவ்வுறவு ஏற்படுத்தும் ரணம், உறவுச்சிக்கல்கள் போன்றவற்றை மர்மமான முறையில்

வாசகனுக்கே விட்டுச் செல்கிறது. வாசகனுக்கு கதை அமைக்கும் முறையைக் கற்றுக் கொடுத்து அவனையே எழுதத் தூண்டுகிறது. மனிதனின் இயலாமை புறச்சூழலுக்கு அடிமையாகும் தன்மை பாவம் சாபம் விதி பழியென ஒருவித உளவியல் மனநிலையை, மனப்பிறழ்ச்சியை இப்பிரதிகள் முன்வைக்கின்றன.

இதன்வழி பிராந்திய மொழியிலே எழுத்தித் தான் வாசகனை ஒரு எழுத்தாளன் சென்றடைய முடியுமா அல்லது ஜனரஞ்ச கமான வாசகன் எதிர்பார்ப்பதைத்தான் எழுத்தாளன் எழுத வேண்டுமா அதாவது வாசகனை மையமிட்ட எழுத்தாகத்தான் அது இருக்க வேண்டுமா ஒரு எழுத்தாளன் தனக்கு வாய்க்கப்பெற்ற மொழிக் கட்டமைப்பிற்கு முக்கியத்துவம் தர முடியாதா போன்ற பல கேள்விகள் எழாமல் இல்லை. ஆனால் இவையெல்லாமே நாவலுக்குள் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன. ஐந்து குறுநாவல்களின் ஒவ்வொரு பகுதியும் சிறுகதைகளை ஒத்திருக்கின்றன. சிறுகதைகள் கைவரப்பெற்ற எழுத்தாளனுக்கு இது எளிமையான ஒன்றே. ஆனால் அக்கதைகளின் தொடர்ச்சியை அல்லது முடிவினை வாசகர்களே அவரவர் தளங்களில் தீர்மானித்துக் கொள்கின்ற உரிமையைக் கொடுத்து விட்டுச் செல்கிறார்.

நாவலின் மூன்றாவது அத்தியாயமாக நோபல் பரிசு பெற்ற எழுத்தாளனின் முதுமைப்பருவம் புனையப்படுகிறது. இவருக்கு வண்ணத்துப்பூச்சிகள் தாம் கதை புனையத் தூண்டுபவை. அவர் விரும்புவது வண்ணத்துப்பூச்சிகள் அல்லது அவர் விரும்புகின்ற ஒரு சிலர் வண்ணத்துப் பூச்சிகள். தன வாழ்விற்கு அல்லது எழுத்திற்கு சுவாரஸ்யத்தைத் தராத மனைவி சாரதாவை எவ்வித வன்மமோ குற்றமோ அல்லது காரணமோயின்றி பிரிகிறார். ஆனால் பிரிவிற்குப் பின்னரே சாரதா முகமகிழ்ச்சியோடு இருப்பதோ குடும்பம் குழந்தை போன்ற அமைப்பில்லாமல் தோழியாக காதலியாக அவர் எழுத்தின் ரசிகையாக வரும் ராஞ்சனா அவரோடு வாழ்வதோ இங்கு முரண்கள் அல்ல. ஆனால் சாரதாவின் மகள் வண்ணத்துப் பூச்சிகள் வரைந்த ஓவியத்தை காண்பிக்கும் தருவாயின் ஒரு சிறு அதிர்வு ஏற்படாமலில்லை.

இறுதியாக சொல்புதிது பொருள் புதிது என்பது போல கதை சொல்லக்கூடிய உத்தி புதிது. நுட்பமான சில தருணங்களைக் கூட இந்நாவல் எளிதில் கடந்து விடுகிறது. பாத்திர இட கால வருணனைகளை இந்நாவல் கவலை கொள்ளவில்லை. அது இங்கு அவசியமாகவும் படவில்லை. இந்நாவலில் யதார்த்தமும் புனைவும் விரவியுள்து. மாய யதார்த்தத்திலமைந்த சில நிகழ்வுகளையும் குறியீடுகளையும், குறியீடுகளற்ற வெற்றி நிலையையும் ஆங்காங்கே காணமுடிகிறது. இவ்வாழ்க்கையே அபத்தங்கள் வழி கட்டமைக்கப்பட்டதுதான் என்ற இருத்தலியல் உண்மையைக் கூறிய நிலையிலும் எவ்விதமான சமரசமோ போலித்தனமோ இல்லாத எழுத்தாளனின் வாழ்வினைப் புதிய பாணியினாலமைந்த கதை சொல்லிய உத்தி முறையிலும் இந்நாவல் வெற்றியடைகிறது.